04.11.2025 OS.No.306/2017 PW1 Name :.ரத்தினமூர்த்தி

<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் விவசாயம் செய்கிறேன். என்னுடைய தாத்தா பெயர் ராமசாமி கவுண்டர். என்னுடைய தாத்தாவிற்கு மூன்று வாரிசுகள். அவர்கள் லட்சுமணன் கவுண்டர், திருப்பதி கவுண்டர், கண்ணன் கவுண்டர் ஆவார்கள். நானும் 5, 6 பிரதிவாதிகளும் திருப்பதி கவுண்டரின் வாரிசுகள். வழக்கு சொத்துகள் என்னுடைய தாத்தா ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவர் 1980ல் இறந்தார். அந்த காலத்தில் காணி என்றும் பைமாசி என்றும் கூறுவார்கள்.
2. பைமாசி எண் 8 க்கு தற்போதைய சர்வே எண். 26/2 ஆகும். ராமசாமி கவுண்டர் இறந்தபின் அவர்களுடைய வாரிசுகள் சொத்துகளை 3 பாகங்களாக பிரித்து தனிதனியாக அனுபவித்து வந்தார்கள். வழக்கு சொத்து என் அப்பா திருப்பதி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. 1976ல் என்னுடைய தகப்பனார் இறந்தார். அவர் இறந்தபின் நானும் 5, 6 பிரதிவாதிகளும் சொத்துக்களை பிரித்து பயிர் செய்கிறோம். 1985ல் நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம்.
3. 1 ஏக்கர் 70 செண்ட் 5ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் அளவு சரியாக தெரியவில்லை. அதில் மரங்கள் எதுவும் இல்லை. அதில் 1கிணறு உள்ளது. அது மூவருக்கும் பங்கு உண்டு. பெரியவர் மூவருக்கும் பங்கு உண்டு. இன்றைய தேதிவரை கிணற்றை கூட்டாக தான் அனுபவிக்கிறோம். 6ம் பிரதிவாதி சுவாதீனத்தில் 1 ஏக்கர்

10 செண்ட் உள்ளது என்றால் அளவு தெரியவில்லை. இன்றைய தேதிவரை அந்த சொத்தில் 6ம் பிரதிவாதி பயிர் செய்கிறார்.

4. தற்போது கடலை பயிர் செய்துள்ளார். 1979ல் ஏற்கனவே நான் திருப்பத்தூர் நீதிமன்றத்தில் வழக்கு சொத்து குறித்து வழக்கு போட்டேன் அது எனக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் வந்த பகுதி சொத்தில் தான் 5, 6 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளனர். வழக்கு சொத்துகள் அரசாங்கத்திற்கு சொந்தமானவை கிடையாது.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/11/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.11.04 13:41:59 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.